
Registered in the G, P. O. as a News Paper.

# ஆத்ம ஜோதி.



சுவாமி ராமதாசர்.

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் ஓம்.

சோதி 1. சர்வதாரி௵ பங்குனி௴ சுடர் 5.

# ஆத்ம ஜோதி.

## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சுவாமி ஸ்ரீ ராமதாஸர் தோத்திரம் | 121 |
| 2 | சிவநாம சங்கீர்த்தனம் | 122 |
| 3 | ராமநாம மகிமை | 1 3 |
| 4 | அன்பின் இயல்பு | 128 |
| 5 | ஸ்ரீராமராஜ்யம் | 129 |
| 6 | ஸ்ரீராமசைதன்னியரான......உபதேசமணிகள் | 130 |
| 7 | சுவாமி ஸ்ரீ ராமதாசரின் அருள்மொழிகள் | 131 |
| 8 | பகவான் ஸ்ரீரமண...........அற்புதச்செயல்கள் | 132 |
| 9 | அதிசயம் | 134 |
| 10 | காரைக்காலம்மையாரின் அற்புத வாழ்க்கை | 135 |
| 11 | குடித்தனவாழ்க்கை...........இல்லவே இல்லை | 137 |
| 12 | ஸ்ரீ ஞானானந்த சுவா........உபதேசமொழிகள் | 140 |
| 13 | மதமற்ற மார்க்கம் | 142 |
| 14 | குருவே | 144 |
| 15 | அன்னையாரின் அழகிய.......ரமணனும் | 145 |
| 16 | ஸ்ரீராமலிங்கசுவாமி........அற்புதங்கள் | 148 |
| 17 | அட்சரநுட்பம் | 150 |
| 18 | சமரசசன்மார்க்க வாசிகசாலை | 151 |
| 19 | செய்தித்திரட்டு | 152 |



ஆத்ம ஜோதி ஓர் ஆத்மீக மாத வெளியீடு.

கௌரவ ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரன்

சந்தாவிபரம்: ஒருவருடம் ரூ. 3/- ஆயுள் சந்தா 75/-
தனிப்பிரதி சதம் 30

நா. முத்தையா
ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி, (சிலோன்).


ஓம்

# ஆத்ம ஜோதி.

"பார்வாழ்க்கை முற்றும் பரமன் வழிபாடாம்
பூரணருக் கென்றே புகல்" —சுத்தானந்தர்.


ஜோதி 1. | சர்வதாரி ஷ்ரு பங்குனிமீ. | சுடர் 5.


## சுவாமி ஸ்ரீ ராமதாஸர் தோத்திரம்.

கன்னடஞ் செய்திட்ட கனபுண்ணியத்தினாற்
காசினியி லவதரித்தே
கார்வண்ணன் பேர்களுள் வித்தலெனும் விறல்நாமங்
கனிவுடன் தாங்கி நின்றாய்
எந்நேரமும் இறைவன் நாமத்தைச் ஜெபித்தலால்
இன்பநிலை கூடுமென்றாய்
எவரிலும் இராமனது திருமேனி காண்பதே
இணையில் சாதனையாக்கினை
அன்னையாங் கிருஷ்ணபாய் ஆர்வமுடன் வேண்டிட
ஆஸ்ரமந் தனையமைத்தே
அண்டிடும் அன்பருக் காறுதலளிப் பதுன்
னரியகட னாய்க்கொண்டனை
என்னையுன் னடியருடன் ஏற்றிட்ட கருணையை
எண்ண உளம் உருகுதையா
எச்சமயத் தோர்களு மேத்தியே வணங்கிடும்
எழில்ராம தாஸகுருவே!

—க. இ.

# சிவ நாம சங்கீர்த்தனம்.

பல்லவி,

நாமஞ் சொல்லுவோம்—சிவ
நாமஞ் சொல்லுவோம், (நாமஞ்)

சரணம்.

நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம் (நாமஞ்)

சோம சுந்தரன் பாதம் காணுவோம்
சும்மா இருக்கின்ற சூட்ச்மம் பேணுவோம் (நாமஞ்)

சினத்தை வெல்லுவோம் மனத்தை வெல்லுவோம்
அனைத்து மவனென்று அகத்தி லெண்ணுவோம் (நா)

கையில் மலர்கொண்டு காலை மாலையும்
செய்ய மேனியன் அடியில் வீழுவோம் (நாமஞ்)

தேனும் பாலினு மினிய தெய்வத்தை
நானும் நீயுமா யென்றும் போற்றுவோம் (நாமஞ்)

—ஸ்ரீ யோகர் சுவாமிகள்.

# ராமநாம மகிமை.

(ஆசிரியர்)

எல்லாவற்றையுங் கடந்த நிலை, எல்லாவற்றிலுங் கலந்த நிலையென்ற இரண்டு நிலை மெய்ப்பொருளுக்குண்டு. இவற்றை வேதாந்தம் நிர்க்குணம், சகுணமென அழைக்கும்; சித்தாந்தம் சொரூபம், தடத்தம் அல்லது அகளம் சகளம் என்னும். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த குணங்குறியற்ற, அறிவே உருவாய பரப்பிரம்மத்தை வழிபடுதல் முழுஞானிகளுக்கேயன்றி ஏனையோர்க்கும் இயலாத காரியமாகும். இக்காரணம்பற்றியே, கீதையில் பக்தியோகத்தைக்கூறும் பன்னிரண்டாம் அத்தியாயத்தை உபதேசிக்கும்போது 'தேகாபிமானிகள் அவ்யக்தமார்க்கமடைவது மிகக்கஷ்டமென' வற்புறுத்தியுள்ளார் கிருஷ்ணபரமாத்மா. சகுணப்பிரம்மமே வாக்குமனமுடைய மக்களின் வழிபாட்டிற்குரியதாகும். ஆன்மாக்கள் மீது கொண்டகருணை காரணமாக இறைவன் அகள நிலையிலிருந்து இறங்கி திருமேனி தாங்குஞ்சகள நிலையை அடைகிறார்.

'அகளமாயாருமறிவரிதப்பொருள்,
சகளமாய் வந்த தென்றுந்தீபற;
தன்னையே தந்த தென்றுந்தீபற என்கிறது

திருவுந்தியார்.

சகுணப்பிரம்மத்தின் உண்மையை அறியாது, நிர்க்குணப்பிரம்மோபதேசஞ் செய்யவந்த தோதாபுரிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளிவிக்கிரகத்தில் ஜெகன்மாதாவைப் பிரத்தியக்ஷமாகக் காண்பித்தனர். சஹஜநிர்விகல்பசமாதியிலமர்ந்துகொண்டு, ஞானமார்க்கமாகிய ஆத்மவிசாரத்தை அருளும் ஸ்ரீ ரமணமூர்த்தியும் சகுணவழிபாட்டின் அத்தியாவசியகத்தை இஸ்லாமிய அன்பர்கட்கும் ஐரோப்பிய பக்தர்கட்கும் மயக்கந் தீரவிளக்குகிறார். மனக்கண்ணைப்புருவமத்தியில் நிறுத்தி யோகஞ்செய்யுஞ்சாதகர்கள் தாமும் நாம ஜெபம் அல்லது மந்திர ஜெபம் செய்தால்தான் தியான லட்சியத்தை இழக்காமல் இருக்கமுடியுமென்பது அவர்கருத்தாகும்.

சகுணவழிபாட்டில் பகவானுடைய அனந்தகல்யாண குணங்களையும் அவருடைய திருநாமங்களையும் இடைவிடாது உச்சரிப்

பது விசேடித்தசாதனையாகின்றது. இக்கலியுகத்தில் பக்திநெறியைப்பேணுவோர்க்கு நாம ஜெபம் போன்ற எளிதான சாதனை பிறிதொன்றில்லையென்பதே அனுபூதிச்செல்வர்களின் முடிபுமாகும். 'பகவானின் திவ்விய நாமமே பக்திசாரம்; ஞானசாரம்; அதனை உச்சரி; பாபம் போகும். அதுவே எளிதான வலுவான சாதனம்' என்கிறார் ஞானதேவர்.

நமது மனமென்னுந்தடாகத்தில் உதித்தெழும் ஒவ்வொரு அலையும் நாமரூபக்கட்டுப்பாட்டுள் அடங்கியிருத்தலால், ஆத்மீக சாதனத்திற்கு பகவானுடைய நாமரூபங்கள் பிரதானமாகின்றன. ஐம்புலன்கட்கப்பாலுள்ள ஆத்மதரிசனத்திற்கு, நமது அபிப்பிராயங்களின் உருவங்கள் போலமைந்த திருநாமங்கள் உதவிசெய்கின்றன. 'உரையில் உன் பெயர், உள்ளத்தில் உனது திருவடிவு' என்கிறார் துக்காராம். நமது நண்பர் ஒருவரின் பெயரைக்கேட்டதும் அவரின் தோற்றம் உடனே நமது மனக்கண்முன் தோன்றுகிறதல்லவோ? எனவே, கடவுளின் உருவத்தை நமது உள்ளத்திரையில் வரைவதற்கு அவரின் திருநாமத்தின் உதவிமுதலில் வேண்டப்படுகிறதென்பது வெளிப்படை. சிவத்தை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவித்துக்கசிந்துருகிய அப்பர் சுவாமிகள், தமது ஆனந்தானுபவத்தை விளக்கும் போது 'முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்' எனமுதலில் திருநாமத்தையே வைத்துள்ளார். இக்கருத்தின் விரிவுரைபோல் விளங்குகிறது மகாத்மா இராமலிங்கரின் கீழ்க்கண்ட பாடல்:—

பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகையென் கணவர்திருப் பேர்புகலென் கின்றாய்
அருகர்புத்தராதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவமென்பேன் சத்திசிவமென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரமமென்பேன்
துருவுசுத்த பிரமமென்பேன் துரிய நிறைவென்பேன்
சுத்தசிவமென்பனிவை சித்து விளையாட்டே.

இந்தமுறையில் நாம் ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாப்பெருமானுக்கு ஆயிரந்திருநாமங்கள் சூட்டி வணங்குகின்றோம். அவரை மங்



களப் பொருளாய் மதிக்கும்போது சிவம் என்கிறோம்; எங்கும் வியாபித்துள்ளவராய்க்கருதும் போது விஷ்ணு என்கிறோம்; அழகனைக்காணும்போது முருகன் என்கிறோம்; இதேவிதமே ஏனைய நாமங்களும் தோன்றியுள்ளன. அவருக்கு எந்தப்பெயருஞ் சம்மதமே; பக்தி விசுவாசத்துடன் எப்பெயரிட்டழைக்கினும் அவருக்குத்திருப்தியே; அருள் சுரக்கவே செய்வர். தொன்றுதொட்டுள்ள இந்துமதசம்பிரதாயத்தில் பஞ்சாட்சரம், அஷ்டாக்கரம், சடாட்சரம் முதலானவை அவ்வக்காலத்து விளங்கிய மஹான்களின் அனுஷ்டிப்பின் பயனாக அபாரசக்தி பெற்றுள்ளன. இதற்கு ஆழ்வார்களதும் நாயன்மார்களதும் வரலாறுகள் போதியசான்றாகும்.

கவிச்சக்ரவர்த்தியாம் கம்பர் பாடிய ராமாயணந்தோன்றிய பின்னர் ராமநாமமும் நாடெங்கும் பரவி அளவற்ற சக்தியை விளக்கிய தெனலாம். கம்பரின் அரிய காவியம் வெறும் வழி நூலல்ல. வால்மீகியின் கதைப்போக்கை மாத்திரம் அவர் எடுத்துக்கொண்டு, தமிழர் நாகரிகத்தின் உரைகல்லான திருக்குறளின் கொள்கைகளை அடிப்படையாக வைத்து ஓர் புதிய ஆதி நூலையே தந்தனரெனலாம். வால்மீகி ராமனிற் கண்டது ஓர் வீர புருஷனையே. கம்பரோ ராமனை மானிடரூபமெடுத்த பரம்பொருளாகச் சிருஷ்டித்துள்ளார். ராமாயணமானது புராணக்கதையாகவோ, இலக்கியமாகவோ, சரித்திரநூலாகவோ மாத்திரம் நின்று விடாது, ஓர் அரிய பக்தி நூலாகவும் மிளிரச்செய்த பெருமை கம்பருக்கே உரியதாகும். குமரகுருபர சுவாமிகள் மூலம் கம்பர் ராமாயணம் காசிவரைக்கும் செல்லாதிருக்குமேல், இன்று வட இந்தியா முழுதும் போற்றிப் புகழும் துளசி ராமாயணம் தோன்றியே இராதெனக்கூறலாம்.

ஸ்ரீ ராமனிலும் பார்க்க அவனின் திருநாமத்திற்குக்கூடிய மகிமையும் வலிமையும் உண்டென்ற உண்மையை அனுமானின் வாக்காக வால்மீகி தந்துள்ளார். அதனைத்தன் சொந்த அனுபவத்தோடொட்டிய உண்மையாக விளக்குகிறார் கம்பர் கீழ்க்கண்ட பாட்டில்:—

நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்துபோகுமே
சென்மமும் மரணமும் இன்றித்தீருமே
இம்மையே யிராமவென்றெழுத்திரண்டினால்.

இக்கருத்தைத் துளசிதாசர் தமது பாடல்களில் மிகவும் விரிவாக்கியுள்ளார் "ராமா! நின்பாதந்தீண்டியதால் ஈடேற்றமடைந்தது அகலிகை ஒருத்தியே. ஆனால் உனது நாமத்தினால் ஈடேற்றப்பட்டவர்களின் தொகையைக்கணக்கிடமுடியாது" "ராமா! நீ உனது உண்மையான அடியார்களான சடாயுவையுஞ் சபரியையுங் காப்பாற்றினாய். உனது நாமமோ கோடிக்கணக்கானவர்கட்குப்பாவவிமோசனங்கொடுத்திருக்கிறது" எனப்புகழ்ந்து பாடியுள்ளார். ராமானந்தர் வழிவந்த நரஹரிதாஸர் துளஸிதாஸரின் காலத்தைச் சேர்ந்தவர். இருவரும் ராமநாம மகிமையைப் பாடுவதே தொழிலாக வாழ்ந்தவர்கள். மீராபாயின் மனக்கவலை தீர்க்க துளஸிதாஸர் எழுதிய கடிதத்தில் 'ராம நாமமே எனக்கு கற்பகம் போன்றது. அதனால் யான் பேரின்பம் பெற்றேன். ரா—மா இந்த இரண்டொலிகளும் எனக்குத் தந்தை தாய். நான் அத்திருநாமக்குழந்தை ராமனைவிட ராமநாமம் பெரிது.' என்று தமது அனுபவத்தை அறிவுறுத்தியுள்ளார். 'ராம நாமமே நான் விளைக்கும் பயிர், உலவுஞ் சோலை இசைக்கும் கடவுள், பணியும் தலைவன், அதுவே எனது நண்பன்' என பாடிய கபீர்தாஸ் சமரஸஞானியான ராமானந்தரிடம் உபதேசம்பெற்றது ஓர் அற்புதமுறையிலாகும். ஓர் நாள் ராமானந்தர் கங்கையில் நீராடப் படித்துறையில் இறங்கும்போது அவர் பாதம் ஒருவர்மீது மிதித்துவிட்டது. உடனே அவர் மன்னிப்புக் கேட்கும்முறையில் 'ராம் ராம்' என்றார், மிதிபட்ட கபீர்தாஸர் 'குரு மஹாராஸ்! உபதேசம் பெற்றேன், தங்கள் திருவடித் தீட்சையும் பெற்றேன்' என்று விழுந்து வணங்கினார். வள்ளுவர்போலத் தறியில் சேலை நெய்து வளர்ந்த இல்லற ஞானியான கபீர்தாஸர் பெற்ற கல்வி அந்த ராம நாமமே. மஹாராஷ்டிர தேசத்தில் தோன்றிய சமார்த்த ராமதாஸர் துக்காராம் இருவரும் ராம நாம பக்தர்களே.

சென்ற நூற்றாண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி ராமதீர்த்தர் முதலான மஹான்கள் ராமநாம மகிமையைப்பற்றி உபதேசித்தபோதிலும், அதைவிளக்குவதே தமது சிறப்புப்பணியாகக் கருதி வாழ்ந்தும் பாடியுங் காட்டியவர் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஒருவரே. அவரது அரிய பாடல்களிலிருந்து சிலமணிகளை இன்னுமோர் இடத்தில் தந்துள்ளோம். இந்த நூற்றாண்டில் காந்தியடிகளின் பிரசாரத்தால் வடநாடு முழுவதிலும் சமரஸ முறையில் ராமநாமப் பெருமை பரவியுள்ளது. அடிகளின் பூதவுடல் மறைவதற்கு



சரியாக ஒரு ஆண்டுக்கு முன்பு (30-1-1947) அவர் வங்காளத்தில் அம்கி என்னும் கிராமத்தில் தங்கியபோது, ஆட்டுப்பால் கிடையாமல் தேங்காய்ப்பாலை உட்கொண்டதன் காரணமாக, வயிற்றோட்டம் உண்டாகி மூர்ச்சையடையும் அபாயநிலைஏற்பட்டது. கூடவிருந்த பேத்தியாரான மனுகாந்தி அச்சமுற்று டக்டர் சுசிலா நாயருக்குச் செய்தியனுப்பிவிட்டார். மூர்ச்சை தெளிந்ததும், அடிகள் பேத்தியாரை நோக்கி 'குழந்தாய் நீ பயந்துவிட்டாய். பிறரைக்கூப்பிடுவதற்கு பதிலாக நீ ராமநாமத்தைச் சொல்லியிருந்தால் எவ்வளவோ சந்தோஷமாயிருந்திருக்கும். ராமன்தான் உண்மையான டக்டர். அவர் என்சேவை தேவையுள்ளவரை என்னை உயிருடன் வைத்திருப்பார். எனது மனதுக்குள் ராமநாமம் ஆழ்ந்து புகுந்துவிட்டால் நான் வியாதியால் சாகமாட்டேன்' என உபதேசஞ் செய்தனர். மகாத்துமாவைப்போல் வேறு பலரும் ராமநாமப்பிரசாரஞ் செய்துள்ளார்கள். ஆனால், அந்த நாமத்தின் பெருமையையும் மகிமையையும் அதனால் தாமடைந்த அனுபூதி நிலையையும் வாழ்க்கையாலும் வாக்காலும் உலகுக்கு விளக்குவதே தனித்தொண்டாகப் பிறவியின் ஒப்பற்ற நோக்காகக், கருதி, இன்று வாழ்பவர் சுவாமி ராமதாஸர் ஒருவரேயாம். அவர் தம் தந்தையுங் குருவுமான ஸ்ரீ பாலகிருஷ்ணராவிடம் பெற்ற உபதேச மந்திரம் 'ஸ்ரீ ராம்ஜெய ராம் ஜெயஜெயராம்' தம்மை அடையும் ஆத்மப்பசியாளருக்கு அவர் உபதேசிப்பது அதுவேயாம்.

நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியுமாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட்டழியவாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவோர்க்கே

என்ற பாடலில் கம்பர் 'ஜெயஜெய' என்ற கருத்தை அழகாய் அமைத்துள்ளார். ராமன் தோள்வலி-ராமஜெயம்.

'ஓமே பிரம்மம். ஓமேஸர்வம் என்பது வேத ரிஷிகள் வாக்கு. 'ஓமே ராம்' என்பது வால்மீகியும் கம்பருங்கண்ட உண்மை. 'நாராயணாயநம' 'நமசிவாய' என்ற இரு பிரசித்திபெற்ற மந்திரங்களின் இரண்டாவது எழுத்துக்கள் சேர்ந்து உண்டாகிய மந்திரமானபடியால் 'ராம' என்பது தாரக மந்திரமாகும் என்பர் அநு

பூதிச்செல்வர்கள். 'ராமனே எல்லாம்; ராமனே ஓம்; ஓமே ராம், என்கிறார் தமது மனக்கூட்டினின்று உயிர்க்கிளி சதா ராமா! ராமா! என்றழைக்க கனவிலும் நிலைவிலும், அகத்தேயும் புறத்தேயும், ஸ்ரீ ராமனையே கண்டு, பக்தி மார்க்கத்தால் ஜீவன் முத்தர் நிலையை யடைந்த சுவாமி ராமதாசர். அவர் புகழ் இன்று உலகப்பிரசித்தி பெற்றது. சுபானு வருஷம் பங்குனிமாசத்தில் அவதரித்த இப்பெரியாருக்கு இந்த மாசத்தில் அறுபத்தைந்தாவது வயசு நிறைவாகின்றது. இந்தியாவிலும், இலங்கையிலும், உலகின் வேறுபல இடங்களிலுமுள்ள அவரது பக்த கோடிகளுக்கு அவரது ஜென்ம நட்சத்திரம் ஓர் புனித நாளாகும். இக்காரணம் பற்றியே, இந்தமாச 'ஆத்மஜோதி' அவரின் திருவுருவப்படத்துடனும் அருள் வாக்குகளுடனும் பிரகாசிக்கின்றது.

ஓம்

ஸ்ரீ ராம ஜெயராம ஜெயஜெயராம

---

**அன்பின் இயல்பு**

சேவையும் தியாகமும் செய்யா திங்கு
மேவிடு மன்புய ரன்பா காதே;
பிறர்நல மவர்பெறு மின்ப மதற்காத்
தனையர்ப் பணித்தல் தக்கவன் பென்ப;
தன்னல மில்பணி தூயநல் வாழ்வு;
வாழ்க்கைச் சுடரிது, அழியா தெதையும்,
ஒளியும், காந்தியும், உதவிச் சுடர்க;
அறிவே அன்னதன் காந்திய தாகுக;
அன்பே அதனின் ஒளியுமிங் காகுக;
அறியா மையிங் ககன்றொழிந் திடுக;
வெறுப்பெனு இருளும் விட்டு விலகுக;
உறுகஅவ் விடத்தே உயரிய அன்பு;
அன்புயர் அறிவுக் கிறைவா மக்கள்
உள்ளத் தெழுக நீ; உன்னரு ளெங்கும்
பொலிவுற, பிறங்கு பேருல கென்றும்
ஒற்றுமை, சாந்தி உற்றுவா ழியவே.

[சுவாமி ஸ்ரீ இராமதாஸர் அவர்கள் ஆங்கிலத்தில் அருளிய The Nature of Love' 'Wonder என்ற கவிகளைத் தழுவி பண்டிதை. த. இராஜேஸ்வரி அவர்களால் இயற்றப்பட்டவை]

# ஸ்ரீ ராமராஜ்யம்.

[ஸ்ரீ ராகம்] [ரூபகதாளம்

**பல்லவி**

ஸ்ரீராம ராஜ்யம் வருகவே—இந்தச்
செகம் அகமகிழ் சுகம் பெருகவே (ஸ்ரீராம)

அனுபல்லவி

கா ருண்ய மான மஹாத்மா—ஜய
காந்தி ஈந்த சாந்தம் ஏந்தி (ஸ்ரீராம)

சரணங்கள்

கட்டு மின்றிக் கவலை யின்றிக்
கைவீசித் தலை நிமிர்ந்தே
ஒட்டுறவாய் உழைதது்ப் பிழைத்தே—மாந்தர்
ஒட்டுறவாய் உழைத்துப் பிழைத்தே
உதய ரவியின் கதிர்போல் வாழ்வே (ஸ்ரீராம)

ஏழை யின்றிக் கோழை யின்றி,
எதிரி யின்றி இகலு மின்றி,
சூழும் ஆத்ம சக்தி துலங்கவே—வாழ்வு
சூழும் ஆத்ம சக்தி துலங்கவே—
சுத்த சுதந்தர நித்திய
சத்திய காவிய மாகவே (ஸ்ரீராம)

சுத்தானந்த பாரதி

# ஸ்ரீ ராம சைதன்யரான தியாகராஜ சுவாமிகளின்

## உபதேச மணிகள்.

---

மனமே! வருந்தியழைத்தாலும்வாராது வாரா. என்விண்ணப்பத்தைக் கேள்: கெட்டவழிகளில் அலைந்து திரியாதே! ஸ்ரீ ராமச் சந்திரனைச் சரணடைந்து தினமும் பஜனைசெய்து உய்வாயாக!

* * * *

ஸ்ரீ ராமா! சுத்தமனத்துடன் மாந்தர் தியானஞ் செய்தாலே, உன் அருளைப்பெறலாம். மண், பெண், பொன் ஆசையின்றி, பிறரை இகழாமல், இம்சிக்காமல், உன்னைச்சதா நினைத்து நினைத்து உள்ளன்புடன் உருகுவதே உண்மைத்தியானமாகும்.

* * * *

மனமே! உள்ளொன்று நினைத்துப் புறமொன்று பேசுவது ஸ்ரீ ராமனுக்கியற்றும் பஜனையாகாது. புகழுக்காகவும், அற்ப விஷயாதிகளுக்காகவும் ஆசை வைத்துக்கொண்டு வெளிவேடம் போட்டு ஆடுவதும் பஜனையாகாது. ஸ்ரீ ராமனை அன்போடு பஜிப்பதே உய்யும் வழி.

* * * *

ஸ்ரீ ராமா! கலியில் இவ்வுடல் நிலையற்றதென்று ஏன்மாந்தர் அறிவதில்லை? திரவியந்தேடிக் கற்கோட்டைகள் போலத் திருமாளிகைகள் கட்டிச்சுகித்து வாழ்கிறார்கள்; வீடெங்கிலும் பொற்குவியலும் நெற்குவியலுஞ் சேமித்து வைத்துப் பெருமை கொள்கிறார்கள்; சுற்றத்தாரும்வேலையாட்களும் தம்மைச்சூழ்ந்து நிற்கச்செய்கின்றனர். ஆனால் அவர்கள், துறவிகட்கு பசிக்கு ஒரு பருக்கை கூடப்போடமாட்டார்கள்! இத்தகைய கருமிகள், சாண் வயிற்றிற்காகப் பொய்யுரைத்து, எல்லாருடைய பொருளையும் சேர்த்து வைத்துக்கொண்டு, நரகத்தைத்தேடியே விரைகிறார்கள். இவர்கட்குப்பரலோக நினைவு எப்படி வரும்? ஏராமா! ஏன் இவர்கள் உன்னைப்பூசித்து நற்பதம் எய்தலாகாது?

[தெலுங்கிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர்
யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் ]

# சுவாமி ஸ்ரீ ராமதாஸரின்

## அருள்மொழிகள்.

---

பெயரும் புகழுஞ் செல்வமுஞ் சுற்றமும் நேயரும் எல்லாம் கானலினீரே; இவற்றுளொதுவும் உண்மையல்ல. ராமனையுற்று நிலைத்த மனமே அளவறுசாந்தியையுங் கரையறும் ஆனந்தத்தையும் பெறும். அன்பும், அருளும் இன்பும் ராமனே.

* * * *

ராமா! உலகின் துயர்களிற் கண்ணீருகுப்பதும், இன்பங்களிலே இன்னகை புரிவதும், நீயேயாயினும், நீ அவையிரண்டையும் கடந்தப்பாலே கடவுளாயிலகுவை.

* * * *

ராமா! பிரேமை த்வேஷம் என்னும் இரண்டேணிகள் உன்னிடமிருந்துறுவன.இவற்றுள்உன்னையுறுதற்கு ஏறுதற்குஅன்பெனும் ஏணிஉபயோகப்படும்; உன்னை நீங்குவதற்கு—இறங்குவதற்குப்பகைமையாம் ஏணி பயனுளதாகும். அன்பால் ஒற்றுமையும், பகைமையால் வேற்றுமையும் விளைவன. ஒற்றுமை சுகம், வேற்றுமை துன்பம்.

* * * *

எங்கே நோக்கினும் பிறப்பும், வளர்வுந், தேய்வுஞ் சாவுமே. அனைவரும் முடிவில் அழிவை நோக்கியே விரைந்து செல்கின்றனர். அழிவிலா இன்பமயக்கவர்ச்சியாம் அன்பெனுந்திவ்ய அமிர்தம் ஒன்றுமட்டும் இல்லாதொழியுமேல், இப்பெருஞ் சுடுகாட்டின் நடுவே, எல்லாம் முடிவில் புழுதியும் சாம்பருமாகும் இக்கல்லறையிடையே, மனிதன்முன் எத்தகைய பயங்கரமான சோகநிலை தாண்டவமாடும்? பற்பலவாகவும் பயங்கரமாகவும் கம்பீரமாகவும் இலகும் இவ்வகிலத்தே, தோன்றிமாயும் வடிவங்களினூட் பாய்ந்தொளிரும் ஓர் உண்மையே அன்பெனப்படும். அவ்வன்பே இன்பம்; அன்பே கடவுள்; அன்பே ராமன்.

—:—

ஆங்கிலத்திலிருந்து
(தமிழில் மொழிபெயர்த்தவர் திருவருணை
ஸ்ரீ விஸ்வநாத சுவாமிகள்.)

ஓம்

# பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளின் அற்புதச் செயல்கள்.

(உண்மையில் நடந்த ஓர் சம்பாஷணை)

---

ரத்தினம்மாள்:—ஸ்ரீ பகவானுடைய அருள்மகிமையைக் கேட்க ஆவலுள்ளவளாயிருக்கிறேன்.

ஆனந்தம்மாள்:—அம்மா! அது அபாரசைதன்யம். அளவிடுவதற்கரியது. அகிலம் யாவும் நிறைந்தது.

ர—ஆம், அம்மா! அது உண்மையே. ஸ்ரீ பகவான் மலையிலிருக்கும்போது அவருடைய பாதசேவை எனக்கு ஒருதரம் கிடைத்தது. அதன்பின் ஒருசமயம் எனக்கு பெரியதோராபத்து வந்துற்றது. பகவானிடம் முறையிட்டுக்கொண்டேன். அப்போது பகவான், "பயப்படவேண்டாம்: யாதும் உன்னைப் பாதிக்காது" என்று அருள் செய்தார். அந்த வாக்கியமன்றோ இன்றை வரையில் ஊன்றுகோலாக நின்று என் குடி முழுதும் ரக்ஷிக்கிறது. அவரருளால் என்னுள்ளத்தில் ஒரு பிரகாசம் தோன்றி ஆனந்தமளிக்கிறது. அவர் மகிமை மிகப்பெரிதே. இன்னமும் உங்களுக்குத் தெரிந்தவரையில் அவருடைய பெரும்புகழைக் கேட்க ஆவல்கொள்கிறேன்.

ஆ—ஆம் அம்மா! பகவானுடைய அற்புதக்காட்சிகளை நாம் எப்படிச்சொல்லமுடியும்? உலகத்திலுள்ளவர்கள், 'பகவான் உபதேசம் செய்கிறாரா' என்று கேட்கிறார்களே-அவர்மொழி ஒவ்வொன்றும் உபதேச மொழியே. மூன்றுவித உபதேசத்திற்கும் உரியவர் இவரே. ஸ்தூல ரூபத்தில் நின்று வேண்டியதெல்லாம் உபதேசிக்கிறார். சூக்ஷ்மரூபத்தில் நின்றும் உள்ளத்தில் உபதேசிக்கிறார். அறிவுக்கறிவாய் நின்றும் அவரவர் பக்குவத்துக்கேற்க உணர்த்துகிறார். புத்ரன், சிஷ்யன், தோழன், தாசன் என்று இப்படி இன்னம் அநேகம் அடியார்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ர—அவர்கள் யார்?



ஆ—புத்திரனென்றால் கணபதி முனிவர். சிஷ்யனென்றால் முருகனார். தோழனென்றால் நிரஞ்சனானந்தசுவாமிகள். தாசனென்றால் மௌனி. ஸ்ரீ பகவான் ஒருவேளை குரு தக்ஷிணாமூர்த்தியாகவும், ஒருவேளை குழந்தையாகவும், வாலிபராகவும், ஒருவேளைவிருத்தாப்பியராகவும், ஒருவேளை ஒளிப்பிழம்பு வடிவாகவும் பலவித தெய்விக தரிசனம் தருகிறார். ஒருநாள் பௌர்ணமிதினம், தியானத்தில் என்னிதயத்தில் ஜோதியுருவாகத் தோன்றி ஆகாயமளாவி மேகங்கள் கரைவதுபோல் எங்கும் வியாபகமாய் எல்லாப் பக்கங்களிலும் எல்லாப் பொருள்களிலும் சர்வவியாபகமாய் விசுவரூபதரிசனம் தந்தார். கீதையில் விசுவரூப தரிசனத்தில் சில பயங்கரமான தோற்றங்களும் அர்ஜுனனுக்குத் தோன்றின. ஆனால் பகவான் எனக்குத்தந்த விசுவரூபதரிசனத்திலோ பயங்கரமற்ற பிரம்மானந்தத் தோற்றமே இருந்தது. "குருசமஸ்தபூதரே," என்றார் கணபதிமுனிவரும். மற்றொருநாள் மூலாதாரத்தில் விழித்தது போலிருந்தது. சிலநாள் பொறுத்து இதயத்தில் ஜோதிமையத்திலிருந்ததுபோலிருந்தது. ஒருவேளைலலாடஸ்தான முடிவிலிருந்ததுபோல் தோன்றிற்று. ஒருநாள் பகவான் என்னிதயத்தில் பிரகாஸ வடிவாகத்தோன்றி, உள்ளம் உடல் உலகம் பூராவும் ஒன்றாகக் கலந்தது போலிருந்தது. பாணங்கள் போல வெளிப்படலால், எங்கெங்குமுள்ள எல்லா அன்பர்களுக்கும், அவர் அசைவற்றிருந்தும் அவரருள் எல்லாக் காரியத்தையும் இனிது நடத்துகிறது. அவர் ஓங்கார சொரூபமான ஒப்பற்ற பெருவெளியில், பாங்கான ஐந்தெழுத்தாம் பர சொரூபக்கட்டிலிலே, பிரக்ஞானம் பிரம்மமென்னும் பேரின்ப மெத்தையிலே, அகம்பிரம்மாஸ்மி என்னும் அழகுள்ள தலையணையில், தத்வமஸியென்னும் தன்மயநிஷ்டையிலே, அயமாத்மாபிரம்மமெனும் அருட்குருவாய் விளங்குகிறார்.

ஆனால் அம்மா, என்ன சொல்வது அந்த நானாரென்னு மந்திரத்தின் மகிமை! எந்த எண்ணங்கள் எழுந்தாலும் அவற்றையெல்லாம் தலையெடுக்கவொட்டாமல் நறுக்கிவிடுகிறது. இதெல்லாம் சன்னிதான விசேஷந்தான். ஆதலால் நாமெல்லோரும் குருகுலவாசம் செய்வோம். எப்போதும் பெரிய

ர்கள் இவ்வருணாசலத்தில் இருந்துகொண்டேயிருக்கிறார்கள். இப்பொழுதும் அடி முடி அகம்புறமும் பழுத்த நமது ரமணசற்குருநாதர் இருந்து அடியார்களாகிய நம்மெல்லோரையும் ரக்ஷிக்கிறார். அவருடைய அற்புதலீலைகள் அருட்கண்ணுடையவர்க்கல்லவோ தெரியும். நமது பகவானும் மகாத்மா காந்தியும் இவ்வுலகத்தில் அவதார புருஷர்களாகத்தோன்றி மக்களை ரக்ஷிக்கிறார்கள். மகாத்துமா காந்தி பெண்களுக்கு சமத்துவம் கொடுத்தார். அதுபோலவே நமது பகவானும் கொடுத்திருக்கிறார். ஆனால்இவர் நிவிருத்தி சாதுபோல் இந்திரியங்களை யொடுக்கி அகத்தை நோக்கும் உபாயங்களையே போதிக்கிறார் ஆனால் மகாத்துமா காந்தியோ ஞானேசுவரர் போல் வெளியில் பெண்களுக்கு நிர்ப்பயமும் நிரகங்காரமும் நிலை நாட்டுகிறார். வெளியிலுள்ள பந்தங்களை விடுதலை செய்கிறார். நமது பகவானும் ஆத்மஞானத்தை தன்னருள் நோக்கால் அறியச்செய்கிறார். நமது ஸ்ரீ ரமணமஹர்ஷிகளின் அற்புதமான ஞானசக்தியின் வல்லமையை நம்மால் அளவிட்டுச் சொல்லமுடியாது.

அதீத அதீதம் அகண்டாகார சச்சிதானந்த
பரப்பிரம்மமே நமோ நம

சற்குருரமணர் வாழ்க!

ஓம் சாந்தி.

---

அதிசயம்

அதிசய மிதுகாண்; அன்பனோ டாடினன்;
உற்றஅவ் விளையாட் டோய்விலா தாடையில்,
என்னுடை அன்பன் இமைப்பில் மறைந்தனன்;
அன்பன் யான்என் உணர்வுயான் பெற்றனன்;
பின்னையென் அன்பன் தோன்றயாம் ஆடினம்
இமைப்பினில் யான்பின் எங்கோ மறைந்திட
என்னுயி ரன்பன், யானும் தானும்
ஒருதா னாக உலவின னங்கு:
யாரறி வாரிவ் வாடல் ரகசியம்?
யானறி யேனவன் தானறி யானே.

[சுவாமி ஸ்ரீ இராமதாஸர் அவர்கள் ஆங்கிலத்தில் அருளிய The Nature of Love' 'Wonder' என்ற கவிகளைத் தழுவி பண்டிதை. த. இராஜேஸ்வரி அவர்களால் இயற்றப்பட்டவை]

---

# காரைக்காலம்மையாரின் அற்புத வாழ்க்கை.

—:—:—:—

(சிவநேசன்)

இருபதாம் நூற்றாண்டின் இந்துமத சம்பிரதாயத்தில் சுவாமி ஸ்ரீ ராமதாஸரின் பிறப்புக்காரணமாக பங்குனி மாசம் ஓர் புதுச் சிறப்பு அடைந்துள்ளது. இந்தமாசச்சித்திரை நட்சத்திரமே அவரது ஜென்மநாளாகும். இதேபோல், சைவ உலகில் பல நூற்றாண்டுகளாகப் பங்குனி மாசத்திற்கு மகிமை யளித்துவருவது காரைக்காலம்மையாரின் சரித்திரத்தோடுஅதற்குள்ளதொடர்பாகும். அம்மையாரின் குருபூசைத்திருநாள் பங்குனிச்சோதி. 18-3-49 இப்புனித நாள் பொருந்தியுள்ளது. குறித்த இரு நட்சத்திரங்கள் அடுத்து வருவதும் கவனிக்கத்தக்கது.

ஆண்டவனின் அடியார்களது வரலாறுகள் அனந்தம். இவை எல்லா நாடுகளிலும் மதங்களிலும் மொழிகளிலும் உள்ளன. அவற்றுள், ஆண்பாலார்க்கும் பெண்பாலார்க்கும், திரும்பத் திரும்ப நூறு தரங் கேட்டாலுஞ் சலிப்பு ஏற்படாத முறையில் இன்பந்தருந்தன்மை வாய்ந்தது இந்தப்புண்ணியவதியின் புனிதசரிதை. அது அழகானது; அற்புதமானது; அறிவு செறிந்தது; அன்பைப்பெருக்குவது; ஆர்வக்கனலைத்தூண்டுவது; ஆத்மஞானத்தை ஊட்டுவது.

தனதத்தன் மகளாய்த்தோன்றி; புனிதவதியாரென்னும் பேருடன் பரமதத்தனுக்குப் பிரிய பாரியாகி, இல்லற நெறியில் ஒழுகி, சிவநெறி நின்று. பேரின்பமெய்திய இப்பக்த சிரோன்மணியின், ஞானச்செல்வியின், பெருமை அளப்பரிது.

'மடுத்தபுனல் வேணியினார் அம்மையென மதுரமொழி
கொடுத்தருளப்பெற்றாரைக் குலவியதாண்டவத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றுமிருக்கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவாயினதம்மா'

எனச் சேக்கிழார் சுவாமிகளே கேட்டிருக்கும்போது சிற்றறிவுடையோம் என்ன கூற முடியும்? அம்மையார் தலையாலே நடந்த இடமாகிய திருவாலங்காட்டைமிதித்தற்கு ஞானசம்பந்தப்பெருமானே

அஞ்சினறெனின், அம்மையாரின் இறவாத இன்ப அன்புத்திறத்தை நினைக்கவும் எழுதவும் முடியுமோ? காரைக்காலென்னும் இடத்திற் பிறந்து, கைலாசபதியால் 'அம்மையே' என்றழைக்கப் பட்டகாரணத்தினல் புனிதவதியாரை யாம் இன்று காரைக்காலம்மையாரெனப் போற்றுகிறோம்.

அம்மையாரின் இல்லற வாழ்க்கையில் என்றும் பாராட்டுதற் குரிய இரு அரும்பெரும் பண்புகளைக் காணலாம். ஒன்று: தாம் அன்பும் அறிவும் நிரம்பப்பெற்றும் அவையில்லாத கணவனோடு கலந்து இல்லறம் நடாத்தும்போது, அவன் மனங்கோணுதமுறையில் ஒழுகியது. மற்றையது: திருவருளால், அம்மையார் மாம்பழம் பெற்றதைக்கண்டு 'இது தெய்வம்' என்றெண்ணிப் பாண்டி நாடு சென்று மறுமணம் புரிந்து, தான் பெற்ற மகளுக்கு புனிதவதியெனப் பேர் சூட்டி, முதல் மனைவியாரையே குலதெய்வமாகத் தொழுத நாயகன் தானுகப் பிரியுமட்டும், அதாவது அவன் குடும்பத்துடன் வந்து பணிந்து தனது மாறிய நிலையை உலகறியச் செய்யும் வரைக்கும், தாம் அவனை விட்டுப்பிரியாமலும் தமது நிலையைப் பிறர்க்குப் புலப்படுத்தாமலும் வாழ்ந்தது. இவையிரண்டும் இல்லறத்தில் வாழும் நவீன இந்துப்பெண்கள் நன்கு உற்றுநோக்கி உய்த்துணரவேண்டியவை.

அம்மையார் இறைவனை யடைதற்குரிய பக்திமார்க்கம் ஞான மார்க்கம் இரண்டையுங் கடைப்பிடித்துள்ளார். சேக்கிழார் வாக்கில் அவரின் பக்திச்சிறப்பைக்காண்கின்றோம். அம்மையார் அருளியுள்ள பாக்களால் அவரது தத்துவ ஞானப் புலமையை அறிகின்றோம். இரண்டையும் பிணைத்துத்துருவி ஆராயும்போது, பரபக்தியும் ஞானமும் வேறல்ல, இரண்டும் ஒன்றே, என்ற உண்மையை உணர்கின்றோம்.

தம் அனுபவசித்தமான சுத்த அத்துவித நிலையை அடியார்கள் நாடி அடையும் வண்ணம் பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகள் அருளிய 'உள்ளது நாற்பது' என்னும் நூலின் மங்களப்பாட்டான,

'உள்ளதலதுள்ளவுணர் வுள்ளதோ வுள்ளபொரு
ளுள்ளலற வுள்ளத்தே யுள்ளதா—லுள்ளமெனு
முள்ளபொருளுள்ள லெவனுள்ளத்தே யுள்ளபடி
யுள்ளதே யுள்ள லுணர்'

# குடித்தனவாழ்க்கை பேரின்பமடைவதைத்தடுக்கவோ, கெடுக்கவோவல்லதா? இல்லவே இல்லை.

[ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி, மதராஸ்.]

பூவுலகில் மனிதருடைய முக்கிய நோக்கம் முக்தி, மோக்ஷம், பேரின்பம் என்ற பல பெயர்களுடைய ஈசுவரசந்நிதானத்தையடைதலேயாம். கலியாணம் செய்துகொண்டு குழந்தை மனைவி சுற்றத்தாருடன் சிற்றின்பம் நிரம்பிய குடித்தன வாழ்வில் ஈடுபடுதல் பேரின்பத்துறையை யடைவதற்கு இடையூறியற்றுதா என்றதோர் கேள்வி சாதாரணமாய்த் தாய்மார்களும், மற்றவர்களும் கேட்கக்கூடியதே. ஆத்மீகத்துறையில் ஈடுபடுவதென்றால் மற்றைய துறைகளனைத்தையும் விட்டுவிட்டு, சதாசர்வகாலமும் ஜீவன் முக்தியையே நாடித்தபம் செய்வதன்றருத்தமல்ல.

கிரகஸ்தா சிரமம் என்றதோர் நிலை, மனிதர்கள் சரிவர அனுட்டித்து, அதன்மூலம் சித்தி பெற வேண்டுமென்றே ஏற்பட்டது. விவாஹம், சிற்றின்பத்தைக் கொடுக்கிற ஓர் சடங்கு என்று மட்டும் மதிப்பது ஓர் தவறு. அவ்வரும்பெரும் சடங்குக்கு சாஸ்திர முறைகளென்ன வைதீக, லௌகிகச் சட்டதிட்டங்களென்ன, அச்சட

---

முற்பக்கத்தொடர்ச்சி

வெண்பாவைப் புத்திமயக்குறும் சைவசித்தாந்தசாஸ்திர விற்பன்னர்கள், அம்மையாரின்

'அறிவானுந்தானே அறிவிப்பான்தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந்தானே விரிசுடர்ப்பாராகாசம்
அப்பொருளுந்தானே யவன்'

என்ற வெண்பாவைக் கருத்தூன்றிக்கற்று, கற்றபடி நிற்பார்களானால், காண்பான், காட்சி என்பதுபோன்ற ஒருபேதமுமற்ற அத்வைத சித்தாந்தம் என்னவென்பதையும், பிரம்மத்திற்கு அந்நியமாக உண்மைஅறிவு ஏதும் இல்லையென்பதையும் எளிதில் விளங்குவார்கள்; உள்ள பொருள் ஒன்றா, இரண்டா, மூன்றா என்ற வாதப்போரில்இறங்கும்அகங்காரம்அழியும் நிலையையும்அடைவார்கள்.

ங்கை அங்கீகரித்து நடத்துமுன் வரும் சிட்டார்களென்ன இவையெல்லாம் சேர்ந்து அச்சடங்கின் உயரிய நோக்கத்தைக்குறிக்கின்றனவல்லவா? இந்த விசேஷ உள்கருத்து என்னவாயிருக்கலாம்? மனிதரூபத்தில் அவதார புருஷர்களாய், பற்பலயுகங்களில் அவதரித்த சர்வேசுவரனும், மனிதர்கள் போலவே கலியாணம் செய்துகொண்டு, மனைவி மக்களுடன் வாழ்ந்து மெய்ப்பொருளை விளக்கியதாகப் புராணங்கள் சொல்லவில்லையா?

மனிதருடைய இந்திரியங்கள் வெளிப்படையான காட்சியனுபவங்களுக்கென்றேயமைக்கப்பட்டுள்ளன. கண்நேர்த்தியான காட்சிகளைக்கண்டு களிக்கிறது; மூக்கு நல்ல கந்தங்களை நுகருகிறது; காது இனிமையான சங்கீதநாதங்களைக்கேட்டானந்திக்கிறது; நாக்கு மதுரமான பதார்த்தங்களைச் சுவைத்து திருப்தியடைகிறது; சரீரமோ, வாசனைப்பூச்சுகளைப் பூசுவதால் குளிர்ச்சியும் பூரிப்பையும் அடைகிறது. இவையாவும் சரீரத்திற்குப் புறம்பானவிஷயங்கள். ஆனால் இச்சிற்றின்ப சுகங்களை எவ்வளவு அனுபவித்தாலும் திருப்தியுண்டாவதில்லை. அக்கினியில் நெய்கொண்டு ஓமம் செய்வதால் அக்கினி மேன்மேலும் ஓங்கி வளர்வதே போல, சிற்றின்பத்தால் எழும் ஆசைகள் அனுபவிப்பதால் தணியாமல் விருத்தியடைகின்றன. "நான்", "எனது" என்ற அகங்காரமும் மேலிடுகிறது. குடும்பப்பற்று (என் மனைவி, மக்கள் என்றது) அதிகமாகிறது. மரணபயம் இடைவிடாது மனதில் திகிலையுண்டாக்குகிறது! இவைகளைப்போக்கடிக்க விஷயானுபவம் சரியான வழியல்ல. ஆசையை அறவே ஒழிப்பதும் சாத்தியமல்ல. புலன்கள் சிருஷ்டிக்கிரமத்தில் சிற்றின்பத்தை நுகரும் பொருட்டே உண்டாக்கப்பட்டவை. பெருவெள்ளம் கரைபுரண்டுவருங் காலத்தில் அவ்வெள்ளப்பெருக்கையெதிர்த்துத்திரும்பி வந்தவழியே திசையை மாற்றுதல் சாத்தியமா? வீடு வாசல் கால் நடைகள் சேதமடையாவண்ணம் சாமர்த்தியமாக வெள்ளப்பெருக்கத்தைப்பக்கங்களில் (அதன்போக்கையொட்டியே திருப்பி) வேறு கால்வாய்களில் புகவிடுவதே தக்கமுறையாகுமல்லவா? அதேபோல் ஆசை வெள்ளத்தையும் பக்குவமாக பலடாக்கங்களில் திருப்பி ஆத்மீகத்துறைகள் வழியே செல்லும் வண்ணம் செய்வது அவசியம். இதுவே விவாகமூலம் நம்பெரியோர் காட்டியுள்ள சாதனமார்க்கம். சாஸ்திர முறைப்படி ஒரு ஆண்மகன் ஒரு பெண்ணை மணம் புரிந்து விதிப்படி இல்லறம் நடத்தி வருவதால்,



அந்த தம்பதிக்குச் சிற்றின்பத்தில் நோக்கம் நாட்டம் இவை ஏற்பட்டு அனுபவித்தானபின் நாளடைவில் சிறுகச் சிறுகக் குறைந்து வந்து முடிவில் பூரணமான விரக்தி, வைராக்கியமும் ஏற்பட்டு விடுகின்றன. முக்கியமாக ஸ்திரீகளுக்கு இது சீக்கிரமே ஏற்படுகிறது. இதுவே ஆத்ம விளக்க சாதனம். மனம் என்ற ஞானக்கண்ணால் ஆத்மஜோதியைப்பார்க்கிறார்கள். காட்சி என்பது ஆனந்தங்கருவது. இதுவே பேரின்பமாகும். ஆகவே பேரின்பத்திற்கு இல்லற வாழ்வு, தகுந்த சாதனமாயிருப்பதால்தான் இல்லறத்தை சாஸ்திரங்கள் புகழ்ந்து பேசுகின்றன. எல்லாச்சமய நூல்களும், சாஸ்திரங்களும் ஆத்ம ஞானத்தை உண்டுபண்ணுவதிலேயே நோக்கமுடையவை. வெவ்வேறு சமய நூல்களின் கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரண்படலாம். ஆனால் சிற்றின்பப்பற்றை அகற்றி ஆத்மஞானம் அடைவதற்கானபோக்கு எந்த சாஸ்திரத்திலும் ஏறக்குறைய ஒரே துறையை நோக்கிச்செல்வதே. மனிதரை சிற்றின்பத்தினின்று மறக்கடித்து நல்வழிகளில் திருப்புவதுதான் அவைகளின் நோக்கம். ஆகவே குடும்பவாழ்க்கையும் அதில் ஏற்படும் சிற்றின்ப நுகர்ச்சிகளும் ஆத்மஞானத்தை உண்டாக்குவதற்கு விரோதமானவையல்ல.

ஒருபெண்ணை மணந்து சாஸ்திரவிதிப்படி இல்லறம் நடத்தினால் விவாகம் பேரின்பத்திற்குச் சாதகமாகவே உதவும் என்பது கண்கூடு. விவாகம் செய்துகொள்ளாமலும், அறநெறி வழுவாது இல்லறம் நடத்தாமலும், மனம்போனபடி சிற்றின்ப வெறிகொண்டு ஆசைகளை அனுபவிப்பவன் நற்கதியடைவதுமில்லை. சரீரம் வேறு ஆத்மா வேறு என்ற வித்தியாசத்தையறியாமல் மாயை என்ற இருளில் அகப்பட்டு உழன்று கிலேசமுற்று நாசமாகிறான். இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு சுகமில்லை. ஆங்கில நூல்களிலும் விவாகத்தின் முக்கிய நோக்கம் ஆத்மஞானமடைவதற்கே என்றும் விவாகமுறையில் ஆண்பெண்கள் ஒன்று சேர்ந்து கூடிவாழாது, விலங்குகளைப்போல ஆசைகளை திருப்தி செய்துகொள்வது கேவலம் மனுஷ்ய ரூபமெடுத்த மிருகஜாதிகளே யென்றும் கண்டித்து எழுதியுள்ளனர். இதெல்லாம் சரிதான்: சர்வ வல்லமையுள்ள பகவான் கூட உலகில் அவதரித்த சந்தர்ப்பங்களில் சாமானிய மனிதரே போன்று இல்லறம் நடத்தியதாகச் சொல்வது பொருத்தமா? நிகழ்ச்சி பெற்றுள்ளவோர் சம்பவமாயிருந்திருக்குமா என்ற ருசிகரமான கடினக்கேள்விக்கு இதைப்படிக்கும் என்சகோதரிகள் உத்தரம் தருவார்களா? அடுத்த கட்டுரையில் இதைப்பற்றிய சில விஷயங்களை எடுத்துக்காட்ட வெண்ணியுள்ளேன்.—வணக்கம்—

# ஸ்ரீஞானானந்த சுவாமிகளின் உபதேசமொழிகள்.

சீடன்:— ஹே பகவன், சுவர்க்கம் நரகம் என்கிறார்களே. அதன் கருத்து யாது?

சற்குரு:—ஹேமைந்த, இன்பம் ஆனந்தம், பேரின்பம்சந்தோஷம் இந்நிலையானது உண்டாகும் தூல தேகத்தில் தத்துவத்தை நீக்கிப் பார்க்கும்போது; அதாவது தேகத்தை நீக்கி அறிவு வடிவமாகத் தன்னை அநுபூதி வாயிலாகப் பார்ப்பது சுவர்க்கமெனவும், நரகமென்பது துன்பம் காணும்படியாகிய இந்த தூல தேகத்தை யான் என்று அபிமானித்துக் கொண்டிருப்பதே "மூவேழு நரகு மஃதே" நரகமென்பதாம்.

சீடன்:— கடவுள் சமயந்தோறும் வெவ்வேறாகக் கூறுகின்றார்களே இதன் கருத்து யாது?

சற்குரு:—கடவுள் ஒன்றே. ஆனால் தங்கமானது ஒன்றாக இருந்தும் ஆபரணவிளக்கத்தால் சந்திரஹாரம், சங்கிலி, மோதிரம், காப்பு. அட்டிகை யெனத் தோன்றினும் தங்கம் ஒன்றே. அதுபோல் சமயவாதிகள் அல்லாஹு, யேசுபகவன், சிவபெருமான், மகாவிஷ்ணு எனக்கூறினும் எங்கும் நிறைந்த இறைவடிவமான அரூப வஸ்து ஒன்றேயென்பது இங்கு உணரத்தக்கது.

சீடன்:—பந்த மோட்சமென்பது யாது?

சற்குரு:—நான் மனிதன் இன்ன ஜாதியன் எனக்கு மனைவி மக்கள் உண்டு. நான் பணக்காரன் ஏழை, நஞ்சை, புஞ்சை நிலம் உண்டு என்பதாக கடும்பற்று உள்ளத்துடன் இருப்பதே பந்தமாம். இந்த தூல தேகம் என்னுடையதல்ல நான் சச்சிதானந்த வடிவினன் ஆத்ம சொரூபன் பிரம்மானந்த வடிவினன் நானே பிரஹ்மம் அந்த பிரஹ்மமே நான் என்று எண்ணுவதே மோட்சமாம்.

சீடன்:—மெய்யன்பர் நிலையாவது யாது?

சற்குரு:— அன்பிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்த பெரியோரது நட்பைப் பெறுவதும், செல்வம் வந்தபோது செருக்குறாமலும், வறுமை வந்தபோது துன்பப்படாமலும், தெய்வத் திருவருள் பெற்ற மெய்யன்பர்களது சீரிய நூல்களை ஆராய்ந்து, அவற்றில் அறிவுறுத்தப்படும் உண்மைகளை உணர்ந்து, அதன்படி நடப்பதும், 'நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்' என்ற நோக்கத்துடன், தான் கண்டறிந்தவ



ற்றை மற்றவர்களுக்கு வெளியிட்டு நடப்பதும், சீரிய மெய்யன்பர்களின் சிறந்த கடமையாமென்பது இங்கு உணரத்தக்கது.

சீடன் :—ஞானம் என்பது யாது?

சற்குரு:—சற்குரு மூர்த்தியை அடைந்து அவரால் ஒரு மொழியைப் பெற்று அதனால் ஞான யோகத்தையடைந்து ஆனந்தத்தை அநுபவிக்கிற நிலை எதுவோ அதுவே ஞானமாகும். யோகத்தின் முடிபே ஞானம். ஜீவன் பிரமத்தோடு ஐக்கியமாகி விடுகிறதே ஞானம். மறுபிறப்பற்றது ஞானம் என்பதும் இங்கு உணரத்தக்கது.

சீடன்:—கடவுள் காசி, இராமேஸ்வரம், திருப்பதி, பழனி முதலிய இடத்தில் மாத்திரம் தானா இருப்பது கூறியருளுக.

சற்குரு:—கடவுள் எங்கும் நிறைந்தவர், நடுநிலையாக உள்ளவர். அவர் எல்லாவற்றையும் சமமாக நடத்துகிறவர். அவரை அறிவிப்பதற்குப் பரிசுத்தமான மன நிலையை யடைய வேண்டும். அடைந்தால் ஞானமுண்டாகும். பரிசுத்த மனதினால் இருதய கமலம் பரிசுத்தமாகி, இதன் வழியாய் ஞானம் தோன்றுமென்பதறிவாயாக.

(சமரச சன்மார்க்க வாசிகசாலையில் இம்மாசம் சேர்த்துக் கொள்ளப்பட்ட 'ஞான இன்பவெளி' யிலிருந்து எடுக்கப்பட்டது)

---

அகரமென வறிவாகிய கிலசரவசரவுயி
ராக்குவதும் ராம நாமம்
ஆழ்வார்கள் பன்னிருவர் பாடு தமிழ் மாமறைகள்
அறைவதும் ராம நாமம்
உகரமென வண்டபகிரண்டத்துளுயிர் கடமை
யோம்புவதும் ராம நாமம்
ஓதரிய நான்மறைகள் உப நிடதமாகமத்
துட்பொருளும் ராம நாமம்
மகரமென நின்றுலகின் மன்னுயிர்கள் யாவையு
மறைத்தருள் செய்ராம நாமம்
மாமறைகளேத்தரிய வைகுந்த வீட்டினிடை
வாழ்வதும் ராம நாமம்
நிகரில்பர ஞானமோ னத்தவருளந்தனில்
நின்றொளிரும் ராம நாமம்
நேடியதெலா முதவு தேவர்துயர் தீர்த்தருள்செய்
நேசராம் ராம ஜெயமே

# மதமற்ற மார்க்கம்.

[சுவாமி ஸ்ரீ ராமதாஸ் அவர்களின் ஆங்கில நூல்களிலிருந்து திரட்டிய 'சாதகர்குத் துணை' (Guids to Aspirants) என்னும் நூலின் மொழிபெயர்ப்பு,]

(விசாகர்).

ஆத்மீக விடுதலையையும் அமைதியையும் வேண்டிப்பிரயத்தனஞ் செய்வோருக்கு மார்க்கங்களும் வகுப்புகளும் நிலையங்களும் உலகில் பல உள்ளன. தெய்வீக பூரணத்துவமாகிய லட்சியத்தை அடைய ஆன்மாவைத் தூய்மையாக்கி உயர்த்துவதற்கு வகுக்கப்பட்டுள்ள வழிமுறை நியமங்களும் அநேகம். இவைகளைப்பின்பற்றி அப்பிய சித்துத் தத்தம் லட்சியத்தை அடைவதற்கு முயற்சிக்கும் சாதகர்கள் எங்கும் உண்டு. தாங்கள் ஏதோஒரு ஒழுங்கிற்கு உட்பட்டிருப்பதாக அவர்கள் உணருகிறார்கள். சில அனுபவங்களின் பின் தங்கள் முன்னேற்றம் திருப்தியாய் இல்லாததைக் காண்கிறார்கள். எப்போதும் போல அவர்கள் உள்ளம் மாசு படிந்தே இருக்கிறது. மனதில் அமைதியில்லை. சிறிது நேரம் சாந்தம் ஏற்பட்டாலும் மறுபடியுங் குளப்பத்திற்கு உள்ளாகி துன்பப்படுகிறார்கள். நித்திய சாந்த வேட்கையில் சில சாதகர்கள் அபாரமான வாஞ்சை உடையவர்களாக இருக்கிறார்கள். அத்தனை உறுதியும் வைராக்கியமும் இல்லாத சாதகர்களும் உண்டு. இன்னுஞ் சிலர் சமய வழிபாட்டின் வெளித்தோற்றத்தையே காட்டுவோர்களாக இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் சந்தேகத்திலும் குழப்ப நிலையிலுமே இருக்கிறார்கள். தாங்கள் இருட்டில் அலைவதாகவும் வெளிச்சத்திற்கும் விடுதலைக்கும் உரிய பாதையைத் தேடுவதாகவும் நினைக்கிறார்கள். தேடுவது கெதியில் கிடைத்துவிடும் என்னும் நம்பிக்கையில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள்.

எவ்வித துன்பகரமான அனுபவங்களானாலும் அவை, ஆன்ம வளர்ச்சிக்கும் பரிணாமத்திற்கும் அவசியம் என்பது உண்மை.

முயற்சி முன்னேற்றத்தின் உண்மையான தன்மை ஆனால் ஆத்மீகப்பாதையுடன் தொடர்புள்ள சிக்கலுஞ் சஞ்சலங்களும் நிறைந்த எண்ணங்களில் இருந்து வெளியேறும் வழியை எவ்வளவு கெதியில் காணக்கூடுமோ அது அவரவருக்கு நன்மையே தரும்.



குறித்த ஒரு பாதையும் வறட்டுமுறையும் உண்மை வழியல்ல. ஏதாவதொரு கொள்கையிலோ சங்கத்திலோ சேர்வதும், அவைகளின் கிரியைகள் சடங்குகளில் பங்குபற்றுவதும் அவ்வழியாகமாட்டாது. வழியென ஒன்றைக்குறிப்பிடின் அது தெளிவுடையதாகவே இருக்கும். நிறைந்த அன்புங் கருணையும் உள்ள இறைவனைக் கூவியழை. உன்னை ஏற்று தனது ஜோதிமயமான இன்பமயமான குழந்தையாக்கும்படி பிரார்த்தி. அவனருள் உன்னைத் தூய்மையாக்கி சக்தியளித்து உன்னையே முழுவதும் ஏற்றுக்கொள்ள இடங்கொடு. உன்னுடைய எல்லாவற்றையும் அவனுக்கு அர்ப்பணஞ் செய்து உன் உள்ளும் புறமும் அவன் உறைவதை உணர்.

நீ உண்மையான சாதகன் எனில் உனது வேட்கை அவன் கருணையைப் பெறுவதற்குப் போதிய தீவிரம் உள்ளதாயிருக்கும். நிலையற்ற உலகின் மயக்கிலிருந்து நீ நீங்கியிருத்தல் வேண்டும். உனது சொந்தத் தெய்வத்தன்மையை அடைய தவிக்க வேண்டும். நீ உன்னை அது இது என்று அழைப்பதினாலும், ஒரு குறித்த மதத்தின் சின்னங்களைத்தரிப்பதினாலும் ஒருநோக்கமுங்கை கூடாது. வேஷங்களினால் பிரயோசனமில்லை. போலிப்பாவனையும் கபடவேஷமும் தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்வதாகும். சகல பந்தங்களிலிருந்தும் விடுபடு. நீயே ஆக்கிக் கொண்ட கூண்டுகளிலிருந்து வெளியே வா. அகங்காரத்தை வென்று உன்னுள் இருக்கும் உண்மைப் பொருளின் கருவியாக இரு. உன் நோக்கு விரிந்து உலகம் முழுவதையும் அதற்கப்பால் உள்ளவைகளையும் அடக்கட்டும். சகல ஜீவராசிகளையும் உன் இதயம் அழிவிலா அன்போடு அணைக்கட்டும்.

இறைவனின் எல்லாம் வல்ல சக்தியில் உனது தேகம் தோய்ந்து செயல் புரியட்டும். உனது தேகத்தில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் ஆத்மப் பரவசம் இசைத்து உலக ஒற்றுமையை உண்டாக்கட்டும். மற்றவை யெல்லாம் பயனில்லாப் பேச்சே. மற்றப் பாதைகள் உன்னை எவ்விடத்திற்கும் இட்டுச்செல்லா. ஏமாறாதே.

பெயர் புகழ் பொருளுக்கு அடிமையாகாதே. உலகப் பேறுகளும் உடைமைகளும் அற்றுப் போவன. கடவுளையே உனது இலக்காகவும் இலட்சியமாகவுங் கொள். நீ அவனுடன் ஒன்றாய் இருக்கிறாய். இதை அறிந்து உண்மை இன்பத்தையுஞ் சாந்தியையும் அடைவாயாக.

(தொடரும்)

# குருவே.

[சாது ஸ்ரீ முருகதாஸ்]

ஆனந்தக்களிப்பு — ஏகதாளம்.

கருணையே உருவான குருவே—என்னுள்
வருணனைக் கடங்காது விளங்கும் திருவே

1— வருவாய் என்றே எனை யழைத்தாய்—வந்து
பெறுவாய் என்றே உண்மைக்கண்ணை யளித்தாய்
சிறுமை யென்ப தென்னுள் ஒழித்தாய்—உயர்
பெருமை விளங்க வருள்மழை பொழிந்தாய்.

2— அந்த காரத்தை நீக்கி—அங்கு
சொந்தமாய் நீநின்று ஜோதியுண்டாக்கி
சிந்தனைப்பேயை ஒழித்து—எங்கும்
உந்தனைக் காணமெய்ஞ் ஞானம் விரித்தாய்!

3— அன்பென்னும் தேவியை வைத்து—அங்கு
என்பேரென்னும் பெரும்போக்கைச் சிதைத்து
இன்ப வடிவம் நீ என்று—எங்கும்
துன்பமொழிப்போன் நானென்று நீ நின்றாய்!

4— ஓம்சக்தி ஓம்சக்தி குருவே—பொங்கும்
ஓம்சக்தி ரூபமாம் கற்பகத் தருவே
ஓம்சக்தி ஓம்சக்தி உருவே—பொங்கும்
ஓம்சக்தி ஆனந்த ஆஸ்ரம குருவே.

---

**இறைவன் திருநாம மகத்துவம்.**

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே,

—சம்பந்தர்.

# அன்னையாரின் அழகிய கோயிலும் அண்ணல் ரமணனும்.

(திருவருணை உமா எழுதியது)

....                    ....                    ....இதயத்
தலத்தே யொளிரும் தன்மயப் பொருளினை
நானு னென்னும் நந்தா மணியினை
தேனு ரமுதைத் தெவிட்டாக் கனியினை
அருளினுக் குருவினை அன்பினுக் கியல்பினை
பொருளினுக் குண்மையைப் போதத்தின் நுண்மையை
அற்புத ரமணனை ஆனந்தா தீதனை
சொற்பதங் கடந்த சோதியை....

பத்துமாதம் உவந்து தாங்கி உருவாக்கி உலகமுய்ய ஞானசற் குருவாயளித்த பாக்கியவதியாம் அன்னை அழகம்மையார் ஒழிவிலொடுங்கப்பெற்ற திருத்தலமாம் திருவருணை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் யோகாம்பிகா சமேத ஸ்ரீ மாத்ரு பூதேச்வர சந்நிதானத்திருக் கோயில் அழகுறக்கட்டி முடிந்து அற்புத உருவில் திகழ்கின்றது. இவ்வாலய மஹா கும்பாபிஷேக மஹோர்ச்சவம் நிகழும் ஸ்ரீ சர்வதாரி வருஷம் பங்குனி மாதம் நாலாம் தேதி குருவாரத்தன்று நடைபெறுகின்றது. சந்நிதியின் முன்புறம் சமைந்துள்ள தத்துவ மண்டபமே புதிதாயமைக்கப்பெற்ற அதியுன்னத சர்வஞ்ஞபீடத்து இனி ஸ்ரீ பகவான் ஆனந்தக்கொலுவிருந்து ஞான ஆட்சிபுரிந்து அன்பர்களுக்கு அருட்காட்சியளிக்கும் மோனானந்த சந்நிதியாகும்.

இன்று கோயிலினுள்ளே சென்று யாவற்றையும் சுற்றிப்பார்த்துக்களித்தேன். எவ்வளவு உன்னதமான வேலைப்பாடுகள்! கர்ப்பக்ருஹ அர்த்தமண்டபத்திலும் தூண்களிலும் மற்றுமுள்ள இடங்களிலும் செதுக்கப்பட்டுள்ள ஒவ்வோர் விக்ரஹமும் மிக மிக அழகாக அமைந்துள்ளது. ஓர் சாதாரணக் கல்லில் இவ்வித அழகிய உருவைச்செதுக்கி உருவாக்கி உயிரளித்த சிற்பிகளின் சாதுர்யந்தான் என்னே என எண்ணி வியந்தேன். அவர்களின் வேலைத்திறத்தில் பகவானின் அருட்டிறத்தைத்தான் காணமுடிந்தது. பகவானின் தரிசனத்திற்குச் செல்லும் போதெல்லாம் வழியில் பெரிய பெரிய கற்களைப் போட்டுக்கொண்டு கவர்ச்சி யற்ற உருவில் கவர்ச்சிமிக்க வேலைப்பாடுகளை ஓர் சிறு உளியும் சுத்தியும் கொண்டு அமைக்கும் அவர்கள் வேலைகளைக்காண்பேன். என் உள்ளம் பூரிக்

கும். அவர்கள் உளியைப்பிடித்துச் சுத்தியாலடிக்கும் ஒவ்வொரு சப்தத்திலும் பிரணவத்வனி ஒலிப்பதாக நினைப்பேன். சிற்சில சமயம் அவர்களிடமே சொல்லியும் ஆனந்திப்பேன். அவர்களைக்காண்பது எனக்கு மிக உற்சாகம். விச்வகர்மாவேறு எங்குளன்?

கர்ப்பக்ருஹம் முகமண்டபம் அதனைச்சூழச்சித்ரீகரித்திருக்கும் உபபீடம் முதல் ஸ்தூபி ஈறாகவுள்ளயாவும் அடியார்களின் தேஹாகாரமான தத்துவத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் சிற்பத்திறன் மிக நுட்பமாகச்செதுக்கி இருக்கிறது.

முக மண்டபத்திருவாயில் அலங்காரத்தை நோக்கினேன். ஸ்ரீ மாத்ருபூதேச்வரர், ஸ்ரீ சக்ரம், யோகாம்பிகையுடன் வீற்றிருக்கும் அதிஷ்டானம் யாவரையும் லயிக்கச்செய்து தன்வசப்படுத்தும் என்பதற்கையமில்லையெனத்தோன்றிறறு.

பிரகாரத்தில் நிருமித்திருக்கும்—கணபதி முருகன் சண்டேசுரர் கோவில்கள் முற்றிலும் பல்லவர்கள் பணிபோன்று கற்களிலே செதுக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ மாத்ருபூதேச்வரரையே நோக்கி மஹாபீடத்தில் சயனித்திருக்கும் நந்திகேசுரர், மண்டபத்தூண்களில் சிவசக்தி லீலைகள் முதலியவை அழகாக அமைத்திருப்பது அதனதன் லக்ஷணத்தையும் பாவத்தையும் உணர்த்துகிறது.

ஸ்ரீ பகவான் யோகாஸனம் யுகதேவதைகளால் தாங்கப்பெற்ற பாதங்களில் பத்மாஸனம் ஸிம்ஹாஸனம் ஹம்ஸபந்தி பிரணவஜ்ஜோதி மயமாக மரகதம்போல இழைத்து ஸ்வர்னகலாபங்களுடன் மஹாபீடமாகச் செய்திருக்கிறது.

யாவற்றையும் பார்த்துக்கொண்டு வெளியில் வந்தேன். சிறிது தூரத்தில் சர்வாதிகாரி ஸ்ரீ நிரஞ்ஜனானந்த சுவாமிகளைக்கண்டேன். அன்னையின் அருளன்பில் மூழ்கிக் குளிக்கும் அவருருவம் மிகப் போற்றத்தக்க புனித உருவமாகுமென என் மனதுள்ளேயே வணக்கம் செலுத்தினேன். பகவானுக்குப்பின் பிறந்தாரென்னும் நிறைந்த எனது பேரன்புடன் தாயன்பில் தவழும் தனயனெனவுங்



கண்டு என்மனம் கனிவுற்றது. அம்மட்டோ! நமக்கோர் அருளரசனை உருவாக்கி யளித்த அன்னையாருக்கு உருவிற்றிகளும் ஆலயமெழுப்ப அவரெடுத்துக்கொண்ட பெருமுயற்சியையும் அக்காரியம் முற்றுப்பெற பகவானளித்த திறனையும் எண்ணியதும் மேலே எதையும் எண்ண சக்தியற்று வீடு திரும்பினேன்.

காணொணாத கருத்தனைக்கண்காண அளித்துச்சொன்னார்க்கு கண்டார்வியக்கும் கோயிலை நிர்மாணிக்கவேண்டிய நமது அன்பின் கடமையை ஸ்ரீ நிரஞ்ஜனானந்தஸ்வாமிகள் நாமுய்யவேண்டி நிறைவேற்றினரென்றால் எண்ணொணாதிறைவனை யிறைஞ்சும் எளிய மனத்தைத்தான் அவருக்கு நாம் அளிக்கக்கூடும்.

ஞானமூர்த்தியை நமக்களித்த அன்னையாருக்குபக்தர்களாகிய நாம் உடல் பொருள் ஆவிகளால் அன்பு செலுத்தமுக்காலும் கடமைப்பட்டிருக்கிறோம். ஞானாசாரியனின் அடிநீழலில் திருத்தொண்டியற்றிடுவோரும் அன்பர்களும் ஆத்மானந்த சாந்தக்கடலில் மூழ்கி இன்புறுவார்களாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி:

## இறைவன் திருநாம மகத்துவம்.

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுந்துயர் ஆயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

—திருமங்கையாழ்வார்.

# ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் செய்த அற்புதங்கள்.

[திரு பி மாசிலாமணி. பி. ஏ.]

"அற்புதங்கள்" என்றால் சாமானியமான விஷயம் அல்ல, எல்லோராலும் எளிதில் செய்யக்கூடியதல்ல. இறைவனின் பூரணமான அருளைப்பெற்றார்க்கன்றி ஏனையருக்கு இயலாது. சித்தர்களே அற்புதம் செய்ய யோக்கியதையுடையவர்கள். நமது சுவாமிகள் எல்லாம் வல்ல கடவுளிடமிருந்து எவ்வளவோ வரங்களை நேரிற்பெற்றவர். இவர் சீர் பெருஞ் சித்தர் எனச் செப்புதற்கு இவரது அரும் பெரும் செயல்களே போதிய சான்றாகும். உள்ளத்தைத் திடுக்கிடச் செய்யும் இவருடைய அற்புதச்செயல்களை இங்கே குறிப்பிடுவோம்.

ஒரு சமயம் இராமலிங்க சுவாமிகள், திருவொற்றியூரில் பட்டினத்தடிகள் சமாதி சமீபமுள்ள குளத்தருகில் முதிர்ந்த கிழவியொருத்தியைப் பார்த்தனர். அவள் பக்தியிற் சிறந்தவள். பட்டினத்தடிகள் ஆலயத்தில் தொண்டு செய்து வருபவள். சுவாமிகளை வணங்கி , சுவாமி அடியாளுக்கு ஏதாவது ஒரு அற்புதம் காட்டியருளல் வேண்டும் என்றாள். உடனே சுவாமிகள், கையில் ஒரு பிடி மண்ணை யெடுத்து அவள்கையில் கொடுத்து மூடிக்கொள்ளும் படியும், தான் போனபின்னர் திறந்து பார்க்கும்படியும் கூறிச் சென்றார்; கிழவி தேகம் சிலிர்த்தது, ஏன்? திறந்து பார்க்கச்சிவலிங்கங்களாக இருந்தன. திகைத்தாள்; ஓடினாள்; ஆடினாள்; பாடினாள். அன்று முதல் ஐயா விடத்தில் அளவு கடந்த பக்தியைப்பாராட்டி வந்தாள்.

சென்னைக்கடுத்த வியாசர் பாடியிலே ஒரு பிரசங்கம் செய்துவிட்டுச் சுவாமிகள் சிறு கூட்டத்துடனே வந்துகொண்டிருக்கிறார். எதிரே ஒரு பெரிய பாம்பு வந்தது. அவ்வளவுதான் எல்லோரும் இப்படியும் அப்படியுமாக எடுத்தனர் ஓட்டம். நமது சவாமிகளோ நின்ற இடத்தை விட்டு அசையவில்லை. வந்த அரவமோ சுவாமிகளுடைய திருவடிகளைச்சிறிது நேரம் சுற்றிக்கொண்டிருந்து பிறகு "போ" வென்று ஐயா கட்டளை யிடப்போய்விட்டது. ஒரு சமயம்

## சாதனை வாரம்

புது ஆண்டுப்பிறப்பன்று இலங்கையில் முதல் முதலாக சாதனைவாரம் கூடத்திருவருள் பாலித்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். இன்று இலங்கை இந்துக்களின் முழுக்கவனத்தை ஈர்த்துநிற்கும் திருக்கேதிஸ்வர ஸ்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் கௌரியம்மன் சந்நிதானத்திலேயே இந்தச் சாதனை வாரம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது அப்பெருமாட்டியின் திருச்சித்தமாகும்.

விரோதி வருஷப்பிறப் போடு கூடிய புனித நாளான புதன் கிழமை யன்று (13-4-49) சாதனை ஆரம்பமாகி திங்கட்கிழமை (18-4-49) இரவு ஒன்பது மணியளவில் முடிவாகும். ஆறு நாட்களிலும், காலை மாலை பஜனை, தியானம், யோகாப்பியாசம், சமய பாடம் பெரியார் வரலாறுகள் படித்தல், உபந்நியாசம் முதலியன நடைபெறும். இச்சிறந்த தொண்டில் பங்கெடுக்க சாது ஸ்ரீ முருகதாஸர், பாலயோகி ஸ்ரீ ராமதாஸர் முதலியோர்கள் சமுகமளிப்பர்.

இந்தச் சாதனை ஒழுங்கில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் தங்கள் விருப்பத்தைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 1-4-49க்கு முன்னர் தெரிவித்து வேண்டிய விபரங்களை அறிந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

கொழும்பு சத்சங்கம்
நீ 44, 42 ஆவது லேன் (No 44, 42ND LANE)
கொழும்பு 6 COLOMBO 6


## யோகி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது

1 நாவலர் பெருமான் 3—00
2 யோகசித்தி (மூலமும் உரையும்) 3—00
3 பாரதசக்தி மகா காவியம் (ஐந்துகாண்டங்களுடன்) 15—00

புதுயுக நிலையம்—புதுச்சேரி.
இப்புஸ்தகங்களைக் குறிப்பிட்டுள்ள விலைக்கே
ஓம்கார நூலகம்
புதுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# அருட் செல்வம்

(தமிழ் வேதம்) (அச்சில்)

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் தொகுத்தது. மாணிக்கவாசகர் முதல் வள்ளலார் வரையில் விளங்கிய அருட்பெரியார் வாக்குகள், வள்ளுவர் போன்ற பெரியார் வாக்குகள், தற்காலப்பெரியார் திருவாக்குகள், அடங்கிய அரிய தொகுப்பு நூல். பாராயணத்திற்கும் தினசரி தோத்திரங்களுக்கும் பள்ளிக்கூடங்களில் பிரார்த்தனைகளுக்கும் சமய வகுப்புகளுக்கும் ஏற்றது. பொருட்குறிப்புடன் கூடியது. ஒவ்வொரு தமிழரும் ஓதியுணரத்தக்கது. இதில் சுமார் 60 அருள் நூல்களின் உயிர்க்கருத்துக்கள் அடங்கியுள்ளன. தமிழருக்கு ஒரு பைபிள் போல் உதவும்படி அழகாகத்தொகுத்துள்ளது 160—200 பக்கம் வரும். அச்சுக்கூலி மிகவும் அதிகமே. பதிபுண்ணியமாகக்கருதி இதைத்தமிழருக்கு எளியவிலை வைத்துத் தருவோம். விலை ரூபா இரண்டு (2) மாத்திரமே. உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள். விவரத்திற்கு ஷை விலாசத்திற்கு எழுதவும்.

அ. செல்வத்துரை
அரசினர் தமிழ்ப்பாடசாலை, ருகலை
கல்கிறேனேயா

# குங்குமம்

[மாதவெளியீடு)

பெண்மை உலகில் புதியதோர் வழிகாட்டி. படிக்கப்படிக்க இனிக்கும் என்றும் புதுமையுடன் இருக்கும் விஷயங்கள்.
கண்களுக்குக்காட்சி மூளைக்கு விருந்து.

1 வருடசந்தா ரூ. 6. 2 வருடங்களுக்கு ரூ. 11.

ஆயுட்சந்தா ரூ. 100.

குங்குமம் காரியாலயம்
முரளி பச்சையப்பன் ஹோஸ்டல் ரோட்,
சேத்துப்பட்டு, மதராஸ் 10.



கௌரவ ஆசிரியர்: திரு. க இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்: நா. முத்தையா 79/6, டொலஸ்பாகே ரோட், நாவலப்பிட்டி. (இலங்கை)
நாவலப்பிட்டி சரவண பிரஸில் பதிப்பித்தது.14-3 49 2000 பிரதிகள்.